**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 192/2022 P.W. 2/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சௌந்தர் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. பொன்னுதங்கம் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 27.07.2026..**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது சரல்விளை முகவரியில் வசித்து டிரைவராக ஆக வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை பார்த்துள்ளேன். கடந்த 13.04.2022ம் தேதி மதியம் 01.00 மணிக்கு சாண்டம் அருகே நானும் என் நண்பர் விஜயகுமாரும் சாப்பிட வந்த போது போலீசார் வாகன சோதனை செய்து கொண்டிருந்த போது நாங்கள் அதை பார்த்தோம். விசாரணையில் அது திருட்டு வண்டி என்று தெரியவந்தது. வண்டியின் பதிவெண் TN 75 AD 1078 ஆகும். போலீசார் அந்த வாகனத்தினை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அந்த ஆவணத்தில் நானும் விஜயகுமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். **அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் ஒரு மணிக்கு விசாரித்தார்கள். நான் கையொப்பம் செய்தததாக ஆவணத்தில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் காவல்நிலையத்தில்வைத்து 01.00 – 02.00 மணிக்கு கையொப்பம் செய்தேன். நானும் விஜயகுமாரும் ஒன்றாக வேலை செய்கிறேன் என்றால் ஆமாம். எத்தனை வருடமாக டிரைவராக வேலை செய்து வருகிறேன் என்றால் 10 வருடமாக டிரைவராக வேலை செய்து வருகிறேன்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM</u>**

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>C.C.No. 192/2022 P.W. 1/L.W.6</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. விஜயகுமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. முருகன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 27.07.2026..**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் தற்போது சரல்விளை முகவரியில் வசித்து Accountant ஆக வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியாது. அன்றைய தினம் மட்டும் பார்த்தேன். கடந்த 13.04.2022ம் தேதி மதியம் 01.00 மணிக்கு நானும் எனது நண்பர் சௌந்தரும் வலியாற்றின்முகத்தில் இருந்து சாண்டம் நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த போது போலீசார் வாகனங்களை சோதனை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது TN 75 AD 1078 என்ற பதிவெண் கொண்ட கிரே கலர் ஹோண்டா டியோ இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபரை பிடித்து போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

2. அப்போது நானும் சௌந்தரும் அங்கிருந்தோம். வண்டி திருட்டு வழக்கு என்று போலீசார் சொன்னார்கள். அந்த நபர் வண்டியை திருடியதை ஒப்புக் கொண்டார். இருசக்கர வாகனத்தை போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி காவல்நிலையத்திற்கு எடுத்துச் சென்றார்கள். நானும் சௌந்தரும் ஆவணங்களில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம்.

3. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். **அந்த**

**ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் என்னை எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து 01.00 மணிக்கு விசாரித்தார்கள். நான் கையொப்பம் செய்தததாக சொல்லும் ஆவணங்களில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் காவல்நிலையத்தில்வைத்து சுமார் 02.30–03.00 மணிக்கு கையொப்பம் செய்தேன். Accountant ஆக எத்தனை வருடம் வேலை பார்த்து வருகிறேன் என்றால் 4 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன்.

2. அதற்கு முன்பு என்னவாக வேலை பார்த்தேன் என்றால் அதே நிறுவனத்தில் வேலை பார்த்தேன். நான் தினந்தோறும் வேலைக்கு செல்லும் நபர் இல்லை என்றால் சரிதான் வாரத்திற்கு ஒருமுறை செல்வேன்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>மறுவிசாரணை:</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .